DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.374/2022**

Continuation of Cross Examination of Witness

08.11.2022

**அ.சா. 1 - குருசாமி**

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

1) நான் திருத்தம் செய்ய தலைமைச் செயலகத்திற்கு அனுப்பியுள்ள ஆதார் அட்டையை இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும் என்றால், அது பற்றி எனக்குத் தெரியாது. மேற்படி ஆதார் அடையாள அட்டையை இணையசேவை மையத்தின் மூலம் அனுப்பியுள்ளேன். அவ்வாறு அடையாள அட்டையை ஒப்படைத்ததற்காக ஒப்புகையை கொடுத்துள்ளார்களா என்றால், கொடுத்துள்ளார்கள். எடப்பாடி நகரத்திலிருக்கும் இசேவை மையத்தின் மூலம் அனுப்பினேன், அதன் பெயர் எனக்குத் தெரியவில்லை. நான் தலைமைச் செயலகத்திற்கு அனுப்பியதாக சொல்லுவது கெஜட்டில் திருத்தம் செய்வதற்காக அனுப்பப்பட்டது என்றால், சரிதான். அவ்வாறு திருத்தம் செய்வதற்கு வரைவோலை மூலம் பணம் செலுத்த வேண்டும் என்றாலும், அவ்வாறு செலுத்தினேனா என்றாலும், இல்லை.

2) செய்தித்தாளில் விளம்பரம் எதுவும் செய்தேனா என்றால், இல்லை. கெஜட்டில் திருத்தம் செய்யக் கொடுத்ததைத்தான் ஆதாரில் திருத்தம் செய்யக் கொடுத்ததாக சொல்லுகிறேன் என்றால், சரிதான். நான் ஆதாரில் திருத்தம் எதுவும் செய்யக் கொடுக்காமலேயே, கெஜட்டில் திருத்தம் செய்யக் கொடுத்துவிட்டு, ஆதாரில் திருத்தம் செய்யக் கொடுத்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. எனக்கு இசேவை மையத்தில் கொடுக்கப்பட்ட ஒப்புகை அட்டையை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன் என்றால், சரிதான். நான் 1 ம் வகுப்பு முதல் 5 ம் வகுப்பு வரை எடப்பாடி புதுப்பட்டி அரசு துவக்கப்

பள்ளியில் படித்துவிட்டு, 6 ம் வகுப்பு முதல் 10 ம் வகுப்பு வரை வெள்ளரிவெள்ளி அரசு உயர் நிலைப்பள்ளியில் படித்துள்ளேன் என்றால், சரிதான். எனது பிறந்த தேதி 01.04.1977 என்றால், அது தற்போது ஞாபகம் இல்லை. பள்ளியில் வழங்கப்பட்டுள்ள சான்றைப் பார்த்தால் எனது பிறந்த தேதியை ஞாபகப்படுத்திக் கொள்ள முடியும் என்றால், என்னால் ஞாபகப்படுத்திக் கொள்ள முடியாது. எனது பிறந்ததேதி 01.04.1977 என்றாலும், இந்த வழக்கிற்காக அது ஞாபகம் இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

3) நான் குருசாமி என்பவரது மகன் தான் என்பதைக் காட்டும் ஆவணம் எதையும் போலீசார் விசாரணையின்போதோ அல்லது நீதிமன்றத்திலோ நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். 08.01.2004 ம் தேதி எனது தந்தை இறந்ததைக் காட்டும் ஆவணத்தை போலீசார் விசாரணையிலோ அல்லது இந்த வழக்கிலோ தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. அந்தியூர் ஜீவா மருத்துவமனையில் அவர் இறந்ததைக் காட்டும் ஆவணம் எதையும் போலீசார் விசாரணையிலோ அல்லது நீதிமன்றத்திலோ நான் தாக்கல் செய்யவில்லை என்றால், அது ஞாபகம் இல்லை. அந்தியூர் ஜீவா மருத்துவமனையில் எனது தந்தை இறந்ததைக் காட்ட என்ன ஆவணம் வைத்துள்ளேன் என்றால், ஆம்புலன்ஸ் டிரிப் சீட் ரசீது வைத்துள்ளேன். மேற்படி ரசீதை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், அது ஞாபகம் இல்லை. அ.சா.ஆ.7 ல் மேற்படி ஆம்புலன்ஸ் டிரிப் சீட் இருப்பதாக குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான்.

4) 08.01.2004 ம் தேதிதான் மேற்படி குருசாமி என்பவர் இறந்ததாக இறப்புச் சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக அ.சா.ஆ.7 ல் குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். அதன் பின்னிட்டும் நான் மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால், ஞாபகம் இல்லை. நான் எந்தவிதமான ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், ஞாபகம் இல்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. ஆம்புலன்ஸ் டிரிப் சீட் குறித்த விவரங்கள் புகாரில் சொல்லப்படவில்லை என்றால், அது குறித்து ஞாபகம் இல்லை. அதுபோன்ற எந்த

ஆவணங்களும் என்னிடம் இல்லை என்பதால்தான், என்னால் அதைத் தாக்கல் செய்யவில்லை என்றாலும், அதை மறைப்பதற்காக ஞாபகம் இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. மேற்படி குருசாமி இறந்தபிறகு சார் பதிவாளர் அலுவலகத்தில் உயிலின் நகலைக் கோரி மனுதாக்கல் செய்து, அதைப் பார்வையிட்டேன் என்றால், 1 வாரம் கழித்துப் பார்த்தேன். நகலைப் பார்த்த உடன் அது போலியான உயில் என்று தெரிந்து கொண்டேன் என்றால், இல்லை, நீதிமன்றத்திற்கு சென்ற பிறகு தான் தெரிந்து கொண்டேன்.

5) உயில் எழுதிய விவரத்தை யார் மூலம் தெரிந்து கொண்டேன் என்றால், பத்திர எழுத்தர் வெங்கடாச்சலம் மூலம் தெரிந்து கொண்டேன். மேற்படி விவரத்தை புகாரில் நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால், ஞாபகம் இல்லை. நான் தாக்கல் செய்த சிவில் வழக்கில், உயில் எழுதப்பட்டிருந்ததாக விவரம் குறிப்பிட்டிருந்தேனா என்றால், ஞாபகம் இல்லை. அவ்வாறு நான் வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றாலும், ஞாபகம் இல்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. மேற்படி வழக்கில், மேற்படி உயில் செல்லாது என்றும், அது என்னைக் கட்டுப்படுத்தாது என்றும் பரிகாரம் கோரவில்லை என்றால், சரியல்ல, கோரியுள்ளேன். அவ்வாறு கோரவில்லை என்றாலும், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. இவ்வழக்கின் 5ம் எதிரி, என் மீதும், மாரியம்மாள் மற்றும் அங்கமுத்து ஆகியோர் மீதும் ஒரு கடனுறுதிச் சீட்டு வழக்கு அ.வ.எண்.19/2006 என்ற எண்ணில் தாக்கல் செய்திருந்தார் என்றால், அது குறித்து ஞாபகம் இல்லை.

6) அசல் வழக்கு எண்.625/2004 வழக்கில், மேற்படி உயிலின் சாட்சி சேமலைக்கவுண்டரின் கையெழுத்து மாறுபட்டிருப்பதாகவும், வேறு வேறு நபர் என்று கூறப்பட்டுள்ளதாகவும் சொன்னால், அது குறித்து ஞாபகம் இல்லை. அசல் வழக்கு எண்.625/2004 ல் பச்சைமுத்துவோ, சேமலைக்கவுண்டரோ சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்றால், சரிதான். பச்சைமுத்துவுக்கும், சேமலைக்கவுண்டருக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும், கெட்ட எண்ணத்தில் அவர்கள் மீது பொய் புகார்

கொடுத்துள்ளேன் என்றாலும், அப்போதுதான் குருசாமியின் சொத்தை நான் அபகரிப்பதை யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள் என்ற எண்ணத்தில், அவர்கள் மீதும் புகார் கொடுத்துள்ளேன் என்றாலும், சரியல்ல. 08.01.2004 ம் தேதி குருசாமி மருத்துவமனையில் இறந்ததாக நான் குறிப்பிடும் சங்கதிக்கும், நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் உள்ள சங்கதிகளுக்கும் வேறுபாடு உள்ளதால், 08.01.2004 ம் தேதி மேற்படி குருசாமி இறந்ததாக கூறுவது பொய் என்றால், சரியல்ல. 08.01.2004 ம் தேதி அவர் இறக்காத சூழ்நிலையில், இவ்வழக்கு சங்கதிகள் எழுந்திருக்க வாய்ப்பில்லை என்றாலும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. 08.01.2004 ம் தேதி மேற்படி குருசாமி இறக்கவில்லை என்றும், 14.01.2004 ம் தேதிதான் இறந்தார் என்றும் வட்டாட்சியர் விசாரித்து வழங்கிய உத்தரவிற்கு எதிராக நான் மேல்முறையீடு செய்யவில்லை என்றால், அவ்வாறு உத்தரவு எதுவும் வட்டாட்சியர் பிறப்பிக்கவில்லை. வட்டாட்சியர் எனது மனுவை தள்ளுபடி செய்துள்ளார் என்றாலும், தற்போது உத்தரவு பிறப்பிக்கவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல.

7) பச்சைமுத்துவுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும், அவர் எழுதப்படிக்காத நபர் என்றாலும், சரியல்ல. கூட்டுக்குடும்பம் என்பதைத் தவிர மேற்படி பச்சைமுத்துவிற்கு தொடர்பு இருப்பதாக புகாரில் நான் குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல. அவர் கூட்டுக் குடும்பத்தில் இல்லை என்றாலும், அவர் திருமணத்திற்கு பிறகு தனிக்குடித்தனமாக இருக்கிறார் என்றால், சரியல்ல. அதனால் தான் அவர் மீது குறிப்பிட்டு எந்த குற்றச்சாட்டும் என்னால் குறிப்பிடப்படவில்லை என்றால், சரியல்ல. போலியான உயிலை தயார் செய்து, எனக்கு பாத்தியப்பட்ட சொத்தை எதிரிகள் அபகரிக்க முயல்வதாக சொல்வது பொய் என்றால், சரியல்ல. நான் சின்னத்தம்பியின் மகன் என்றாலும், குருசாமியின் மகன் அல்ல என்றாலும், அதனால் குருசாமியின் சொத்துக்களுக்கு நான் எப்போதும் வாரிசு ஆக முடியாது என்றாலும், சரியல்ல. அதனால் தான் நான் குருசாமியின் வாரிசு என்பதற்காக வாரிசு சான்றிதழை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. நான் குருசாமியின் வாரிசு இல்லை என்பதால் இந்த புகாரை தாக்கல் செய்தவதற்கு எந்த வித முகாந்திரம் இல்லை என்றால், சரியல்ல.

8) திருமணத்திற்குப் பிறகு எண்ணெய்த் தேய்ப்பிற்காக மாரியம்மாள் புதுப்பட்டிக்குச் சென்ற பிறகு, அவர் ஒரு போதும் குருசாமியுடன் சேர்ந்து வாழவில்லை என்றால், சரியல்ல. பலவழிகளில் சேர்ந்து வாழ முயற்சி செய்தும், அது முடியாததால் 01.08.1975 ம் தேதி மேற்படி குருசாமி, அவரது வழக்கறிஞர் செல்லமுத்து என்பவர் மூலம் மேற்படி மாரியம்மாளின் நடத்தை சரியில்லை என்று குறிப்பிட்டு அறிவிப்பு ஒன்றை அனுப்பியுள்ளார் என்றால், சரியல்ல. அதன் பின்னிட்டு மாரியம்மாள், சின்னத்தம்பி என்பவருடன் சேர்ந்து வாழ்ந்தார் என்றாலும், அவருக்குப் பிறந்தவர் தான் நான் என்றாலும், சரியல்ல. குருசாமி, மாரியம்மாள் என்பவரைத் திருமணம் செய்தார் என்ற ஒரே காரணத்திற்காக, குருசாமிக்கு வேண்டாதவர்கள், குருசாமி இறந்தபிறகு என்னையும், மாரியம்மாளையும் வைத்து அவருடைய சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் பொய்யாக புகார் கொடுத்து, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. மேற்படி சொத்துக்களை தவறான வழியில் அடைய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில், பல்வேறு ஆவணங்களை ஜோடனை செய்துள்ளேன் என்றால், சரியல்ல. நான் குருசாமியின் சொத்துக்களை எப்போதும் அனுபவிக்கவில்லை அல்லது தற்போதும் அனுபவத்தில் இல்லை என்றால், சரியல்ல. குருசாமியின் சொத்துக்கள் என்னுடைய அனுபவத்தில் இருப்பதைக் காட்டும் ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்திலோ அல்லது போலீசார் விசாரணையிலோ கொடுக்கவில்லை என்றால், ஞாபகம் இல்லை.

9) புரவிபாளையம் என்பதும், கள்ளாங்காட்டுத் தோட்டம் என்பதும் வேறு வேறு கிராமங்கள் என்றால், சரிதான். அது இரண்டிற்கும் இடையில் 4, 5 கி.மீ தூரம் இருக்கும் என்றால், சரியல்ல, அது பார்டர் ஆகும். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் பொய்ப் புகார் கொடுத்து, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் சின்னத்தம்பியின் மகனாக இருப்பதால் குருசாமியின் சொத்தைப் பொறுத்து எனக்கு எந்த வித இழப்போ, பாதிப்போ இல்லை என்பதால் இந்த வழக்கை நான் தாக்கல் செய்ய அதிகாரம் இல்லை என்றால், சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.